செ.வெ.எண்: 574 நாள்: 11.09.2020

# தஞ்சாவூர் மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின்கீழ் விவசாயிகள் ஊக்கத்தொகை மற்றும் நிதியுதவி பெற மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆ.ப.,அவர்கள் அழைப்பு

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின்கீழ் 335.73 இலட்சங்கள் 2020-2021ம் நிதி ஆண்டிற்கு நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களுக்கு இலக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் வீரியரக காய்கறிகளான கத்தரி, மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு குழித்தட்டு நாற்றுகள் 1 எக்டருக்கு ரூ.20,000/-க்கான நிதியுதவியில், செடிமுருங்கை சாகுபடி விருப்பம் உள்ள விவசாயிகளுக்கு செடிமுருங்கை கன்றுகள் ஒரு எக்டருக்கு ரூ. 10,000/-என்ற நிதியுதவியில், அடர்நடவு முறையில் மா சாகுபடி செய்வதற்கு மா ஒட்டுக்கள் 1 எக்டருக்கு ரூ. 9,800/- என்ற நிதியுதவியில், கொய்யா அடர்நடவு சாகுபடி செய்வதற்கு கொய்யா பதியன்கள் 1 எக்டருக்கு ரூ. 17600/- என்ற நிதியுதவியில், திசுவாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு திசுவாழைக் கன்றுகள் 1 எக்டருக்கு ரூ. 37500/- என்ற நிதியுதவியில், மல்லிகை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் மல்லிகை கன்றுகள் 1 எக்டருக்கு ரூ. 16,000/- என்ற நிதியுதவியில், சம்மங்கி சாகுபடி செய்யும் விவசாயிகள் சாகுபடி செலவிற்காக எக்டருக்கு ரூ. 60,000/- என்ற நிதியுதவியிலும், தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக மிளகு பயிரிட விரும்பும் விவசாயிகள் வேரிட்ட மிளகு கன்றுகள் ரூ. 20,000/- என்ற நிதியுதவியில், தென்னந்தோப்புகளில் கொகோ ஊடுபயிராக சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் கொகோ கன்றுகள் 1 எக்டருக்கு ரூ. 12,000/- என்ற நிதியுதவியில், காய்கறி சாகுபடி விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு எக்டருக்கு ரூ. 2500/- ஊக்கத்தொகை நிதியுதவியினையும் பெற்று பயனடையலாம் திட்ட விபரங்களுக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர், (நடவு பொருள்),தஞ்சாவூர்- 9965362562,தஞ்சாவூர் மற்றும் பூதலூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் - 9943422198,ஒரத்தநாடு மற்றும் திருவோணம் தோட்டக்கலை உதவி இயக்குநர் - 9488945801,பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் - 9445257303,கும்பகோணம், திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் தோட்டக்கலை உதவி இயக்குநர் - 7299402881 ,பாபநாசம், அம்மாபேட்டை மற்றும் திருவையாறு தோட்டக்கலை உதவி இயக்குநர் - 8526616956,பேராவூரணி மற்றும் சேதுபாவாசத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குநர் - 9445257303 ஆகிய வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.